**மார்ச் - 10**

**"உங்களில் ஒருவனாகிலும் பாவத்தின் வஞ்சனையினாலே கடினப்பட்டுப் போகாதபடிக்கு, இன்று என்னப்படுமளவும் நாடோறும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்லுங்கள்". - எபி 3 : 13**

ஒரு ஆவிக்குரிய மந்தம், ஊக்கமின்மை எந்த அளவிற்காவது நமது ஆவிக்குரிய உணர்ச்சிகளைக் காண முடியாத விதமாய் செயலற்றுப் போகச் செய்துகொண்டு நம்மீது கொண்டுள்ள ஊக்கமளிக்கும் சக்தியை இழந்து கொண்டிருப்பதையும், நாம் உணர்வோமானால், நாம் செய்ய வேண்டிய முதல் கடமை, நாமே ஜெபத்திலும் தேவனோடும் அவருடைய வார்த்தையோடும் ஐக்கியமாவதிலும் ஈடுபட முயற்சி செய்ய வேண்டும். அதன் பலனாக, அதன் பரிசுத்தமாக்கும் வல்லமையை அடைந்து கொள்ளுவோம். ஏனென்றால், நாம் ஆரம்பத்தில் கொண்டிருந்த நம்பிக்கையை முடிவு பரியந்தம் உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருப்போமாகில், கிறிஸ்துவோடு இராஜ்யத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம். **(எபி 3:14)** **-Z '03, 54 (R 3149).**

தனது வெவ்வேறு மார்க்கங்களின் மூலமாகப் பிரவேசிக்கும் பாவம், மிகவும் ஏமாற்றுகிறதாகவும், நல்லது போல தோன்றி ஆனால், உண்மையில் நல்லதல்லாத அதனுடைய நடத்துதலின் விளைவு, நிச்சயமாகவே அதற்குக் கீழ்ப்படியும் இருதயத்தைக் கடினமாக்குகிறது. ஆகையால், கிறிஸ்துவின் சீஷர்களுக்கு சுவிசேஷ யுகம் முழுவதிலும் தேவைக்குத்தக்கதாக ஒவ்வொரு நாளும் ஒருவருக்கொருவர் புத்தி சொல்ல சிலாக்கியம் இருக்கிறது! இவ்விதமாக அவர்கள் குற்றமற்றவர்களாயிருக்கும்படி காக்கப்படலாம். அந்த நாள் மிகவேகமாக நெருங்கிக் கொண்டிருப்பதினால், எவ்வளவு அதிகமாக இந்தக் கடமைக்கும், இந்த சிலாக்கியங்களுக்கும் நாம் பொறுப்பாளிகளாக இருக்கிறோம்!

**- P '32, 30.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

அப் 13:15; 20:2; ரோம 12:8; 2கொரி 9:5; 1தீமோ 6:2; தீத் 2:15; எபி 12:3,4; 13:22; உபா 29:18; சங் 9:15,16; நீதி 5:22; ஏசா 57:20,21; மாற் 7:21-23; கலா 6:7,8; 1பேது 4:3.

**கோபுர வாசிப்பு : Z '03, 53 (R 3149).**

**வினாக்கள் :** இந்த வாரத்தில் விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடும் உடன் சகோதரரை ஊக்கப்படுத்த முயற்சித்தேனா? ஏன்? எப்படி? பலன் என்ன?